

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை பகுத்தறிவு கவிராயர் உடுமலை நாராயண கவி மணிமண்டபத்தில் ரூ.24.10 இலட்சம் மதிப்பீட்டில் நுழைவு வாயில், விக்கெட் கேட், மோட்டார் அறைகளுடன் 102.00 மீட்டரில் கட்டப்பட்டுள்ள சுற்றுச்சுவரினை திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் க.ஈஸ்வரசாமி முன்னிலையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்து பார்வையிட்டார். இதில் ஒன்றிய கழக செயலாளர்கள் பொறுப்பாளர்கள் க.செந்தில்குமார், எஸ்.கே.எம்.மெய்ஞானமூர்த்தி, வா.பாபு, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மு.ஜெயக்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சி.சியாம் பிரசாத், உடுமலை நகர்மன்றத் தலைவர் எம்.மத்தின் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகை - நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசு அலட்சிய பதில்!

## மாநிலத்தின் வளர்ச்சியை திட்டமிட்டு முடக்க சதி - கே.இ.பிரகாஷ் எம்.பி. குற்றச்சாட்டு!



புதுடெல்லி, மார்ச் 11-

தமிழ்நாட்டின் வரிப்பணத்தில் பெரும்பகுதியை எடுத்துக் கொள்ளும் ஒன்றிய அரசு, அதற்குரிய நிதிப் பங்கீட்டை முறையாக வழங்காமல் தொடர்ந்து வஞ்சகமாக செயல்பட்டு வருகிறது. இந்த நிலையில், தமிழ்நாட்டிற்கு எந்தெந்த திட்டங்களுக்கு எவ்வளவு நிதி இதுவரை ஒதுக்கப்பட்டுள்ளது, நிலுவையில் உள்ள தொகைஎப்போது வழங்கப்படும் என்று, நாடாளுமன்றத்தில் நிதியமைச்சகத்திடம் ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பினார்.

எப்போதும் போல, புள்ளி விவரங்களை முறையாக அளிக்காமலும், நிலுவைத்தொகை பற்றி மூச்சுக் கூட விடாமலும் ஒன்றிய அரசு தவிர்த்துள்ளது. உரிய நிதிப்பங்கீடு இல்லாமல், தமிழ்நாட்டு மக்களுக்கான பல திட்டங்களைதன்னுடைய நிதியில் இருந்து மாநில அரசு மேற்கொண்டு வரும் சூழலில் இப்படியொரு பதில் அதிர்ச்சியளிக்கிறது.

**1. 'சமக்ர சிக் ஷா' திட்டத்திற்கு உரிய நிதி வழங்காமல் வஞ்சனை:**

'சமக்ர சிக் ஷா' திட்டத்தில் , 2025 - 2026ம் ஆண்டுக்கான நிதியாக, மார்ச் 5 வரை 538.39 கோடி ரூபாய் விடுவித்துள்ளதாக ஒன்றிய அரசு கூறியுள்ளது. ஆனால், கடந்த ஆண்டுகளில் வழங்க வேண்டிய நிறுத்தி வைக்கப்பட்ட நிலுவைத் தொகை பற்றி எந்த சமிக்ஞையும் பதிலில் இல்லை.

தமிழ்நாடு அரசின் கோரிக்கை, இந்த ஆண்டுக்கு வரவேண்டிய நிதி மட்டுமல்ல, ஏற்கனவே நிலுவையில் உள்ள தொகையை வழங்க வேண்டும் என்பதும் தான். ஆனால், அதைப் பற்றி எதுவும் சொல்லாதது, தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியை சிதைக்கும் தேசிய கல்விக் கொள்கையை ஏற்காததற்கான பழிவாங்கும் செயல் என்றே பார்க்க வேண்டியிருக்கிறது.

**2. 'ஜல் ஜீவன்' திட்டத்தில் நிதி கொடுக்காமல் முடங்கும் குடிநீர் திட்டங்கள்:**

'ஜல் ஜீவன்' திட்டத்திற்கு ஒன்றிய அரசிடம் இருந்து, 3000 கோடி ரூபாய்க்கும் மேல் நிலுவைத் தொகை வரவேண்டும். ஆனால், இது பற்றி ஒன்றிய அரசு பதிலில் எதுவும் குறிப்பிட வில்லை.

இப்படி நிலுவைத் தொகை வராததால், தமிழ்நாட்டில் ஜல்ஜீவன் திட்டத்தின் கீழ் மொத்தம் 18 குடிநீர் திட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக, நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் கூறியுள்ளார். இப்படி தமிழ்நாடு கடுமையாக பாதிக்கப்பட்டும் ஒன்றிய அரசு நிலுவைத் தொகையைப் பற்றி பேசாதது ஏற்க முடியாத ஒன்று.

**3. IGST நிலுவைத்தொகை மற்றும் கடன் வாங்கும் உச்சவரம்பில் தொடரும் சதி:**

IGST நிலுவைத் தொகை மற்றும் மாநிலத்தின் கடன் வாங்கும் உச்சவரம்பில் ஒன்றிய அரசு மேற்கொண்டு வரும் எதேச்சதிகாரச் செயல்களுக்கும், சமாதானமான பதில்கள் கிடைக்கவில்லை.

IGST நிலுவைத் தொகையை மாநிலங்களின் ஒப்புதலின்றி, தன்னிச்சையாகக் கையாள்வதை ஒன்றிய அரசே ஒப்பு க்கொண்டுள்ளது. மார்ச் மாதத்தில் வழங்க வேண்டிய வரிப் பகிர்வைஎவ்வித முகாந்திரமுமின்றி ஏப்ரல் மாதத்திற்குத் தள்ளி வைத்துள்ளதை உறுதிப்படுத்தியுள்ளது. இது, மாநில அரசின் அன்றாட பணப்புழக்கத்தை (Cash Flow) வேண்டுமென்றே சீர்குலைக்கும் செயல்.

மேலும், மாநிலத்தின் கடன் வாங்கும் உச்சவரம்பில் (Net Borrowing Ceiling) நிபந்தனைகளை திணிப்பதையும் ஒன்றிய அரசு ஒப்புக் கொண்டுள்ளது. இதற்கு என்ன காரணங்களை ஒன்றிய அரசு சமாளிப்பாக கூறினாலும், அதைத் துளியும் ஏற்க முடியாது. நிபந்தனைகளை நிறைவேற்றினால் மட்டுமே ஒரு மாநில அரசு தனது வளர்ச்சிக்காக கடன் வாங்க முடியும் என்பது, அரசியலமைப்பு வழங்கியுள்ள மாநில உரிமைகளின் மீதும் கூட்டாட்சித் தத்துவத்தின் மீதும் நடத்தப்படும் போரே.

'திராவிட மாடல்' ஆட்சியில் அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாடு வளர்ச்சி பெற்று வருவதைப் பொறுக்க முடியாமல், செயற்கையான நிதி நெருக்கடிகளை ஏற்படுத்துவதை ஒன்றிய அரசு உடனடியாக நிறுத்த வேண்டும்.

இந்தியாவின் கூட்டாட்சிக்கும், தமிழ்நாட்டிற்கும் எதிரான ஒன்றிய அரசின் மேலாதிக்கங்களை எதிர்த்து, எமது குரல் தொடர்ந்து எழும்!

இவ்வாற கே.இ.பிரகாஷ் எம்.பி. தெரிவித்துள்ளார்.



தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் சட்டமன்றத் தொகுதி குடந்தை கிழக்கு ஒன்றியம் உத்தமதானி ஊராட்சி ஊருடையாநத்தம் கிராமத்தில் 30க்கும் மேற்பட்டோர் அ.தி.மு.க வில் இருந்து விலகி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் மகாலிங்கம் மனைவி இளஞ்சியம் தலைமையில் மாவட்டக் கழக பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ முன்னிலையில் தி.மு.க வில் இணைந்தனர். இந்நிகழ்வில் ஒன்றியச் செயலாளர்கள் உள்ளூர் தி.கணேசன், ஜெ.சுதாகர், ஒன்றிய துணை செயலாளர் நேரு, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பானுமதி கலியமூர்த்தி, நீர் மேலாண்மை குழு தலைவர் கே.பி.இராமலிங்கம், ஒன்றிய பொறியாளர் அணி அமைப்பாளர் டி.எஸ்.மணிகண்டன் மற்றும் கிளை கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.










கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் 73 வது பிறந்தநாளை முன்னிட்டு, திருப்பூர் தெற்கு மாவட்டம், உடுமலை கிழக்கு ஒன்றியம், எலையமுத்தூர் மேட்டுக்காடு கனகம் மஹாலில் ஒன்றிய கழக பொறுப்பாளர் ஈ.கே.மாரிமுத்து ஏற்பாட்டில் தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட கழகப் பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே. ஈஸ்வரசாமி வழங்கினார். இதில் உடுமலை தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் எம்.ஆர்.பாபு உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### சமயபுரம் – மதுரை – தஞ்சை – ஈச்சனாரி – பண்ணாரி உள்ளிட்ட

# 9 திருக்கோயில்களில் வரப்பெற்ற 296 கிலோ பொன் மாற்று - தங்க முதலீடு!

## பாரத ஸ்டேட் வங்கியிடம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்!



திருச்சி, மார்ச் 11-

இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் பக்தர்களிடமிருந்து காணிக்கையாகப் பெறப்பட்டு பயன்படுத்த இயலாத பலமாற்று பொன் இனங்களில் கல், அரக்கு, அழுக்கு நீக்கப்பட்டு, மும்பையிலுள்ள ஒன்றிய அரசின் தங்க உருக்காலையில் உருக்கி, பாரத ஸ்டேட் வங்கியின் தங்க முதலீட்டுத் திட்டத்தின் கீழ் முதலீடு செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை செம்மையாக செயல்படுத்திடும் வகையில் ஓய்வு பெற்ற உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற நீதியரசர்கள் துரைசாமி ராஜூ, ரவிச்சந்திர பாபு மற்றும் செல்வி மாலா ஆகியோரின் கண்காணிப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ், இதுவரை 21 திருக்கோயில்களின் பயன்பாடற்ற பொன் இனங்களை உருக்கி கிடைக்க பெற்ற 1,074 கிலோ 123 கிராம் 488 மில்லிகிராம் சுத்தத் தங்கக் கட்டிகள் பாரத ஸ்டேட் வங்கியின் தங்க முதலீட்டுத் திட்டத்தில் அந்தந்த திருக்கோயிலின் பெயரில் முதலீடு செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் ஆண்டொன்றிற்கு 17 கோடியே 76 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் வட்டித் தொகையாக கிடைக்கப் பெறுகிறது. இந்த வட்டித் தொகை அந்தந்த திருக்கோயிலின் வளர்ச்சிப் பணிகளுக்கு செலவிடப்பட்டு வருகிறது.

மேலும், காஞ்சிபுரம், காமாட்சியம்மன் திருக்கோயில், குன்றத்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருவிடந்தை நித்யகல்யாண பெருமாள் திருக்கோயில், திருமலை வையாவூர் பிரசன்ன வெங்கடேசப்பெருமாள் திருக்கோயில் மற்றும் மயிலாப்பூர் கபாலீசுவரர் திருக்கோயில் ஆகிய 5 திருக்கோயில்களிலிருந்து கிடைக்கப்பெற்ற87கிலோ 761 கிராம் எடையுள்ள பலமாற்று பொன் இனங்களை உருக்கி சுத்த கட்டிகளாக மாற்றிட பாரத ஸ்டேட் வங்கியின் மூலம் மும்பையிலுள்ள தங்க உருக்காலைக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி. கே.சேகர்பாபு அவர்கள் நேற்று (09.03.2026) சமயபுரத்தில் ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற நீதியரசர்கள் துரைசாமி ராஜூ, க.ரவிச்சந்திர பாபு மற்றும் செல்வி ஆர்.மாலா ஆகியோர் முன்னிலையில் சமயபுரம், மாரியம்மன் திருக்கோயில், மதுரை மாவட்டம், மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், கோவை மாவட்டம், ஈச்சனாரி, விநாயகர் திருக்கோயில், திருப்பூர் மாவட்டம், திருப்பூர் அவிநாசிலிங்கேஸ்வரர் திருக்கோயில், பரம்சேர்வழி கரியகாளியம்மன் திருக்கோயில், ஈரோடு மாவட்டம், பண்ணாரி, பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானம், திருநாகேஸ்வரம், நாகநாத சாமி திருக்கோ யில், விழுப்புரம் மாவட்டம், மயிலம், ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் மடம் ஆகிய 9 திருக்கோயில்களுக்கு காணிக்கையாக வரப்பெற்ற 296 கிலோ 600 கிராம் எடையுள்ள பலமாற்று பொன் இனங்களை மும்பையிலுள்ள ஒன்றிய அரசின் தங்க உருக்காலையில் உருக்கி தங்க முதலீட்டுப் பத்திரத்தில் முதலீடு செய்திடும் வகையில் பாரத ஸ்டேட் வங்கியின் திருச்சி மண்டல மேலாளர் எல்.வேலப்பன் அவர்களிடம் ஒப்படைத்தார்.

அதனைத் தொடர்ந்து இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான பக்தர்கள் தங்கும் விடுதியை ரூ. 9.99 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கும் பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், இணை ஆணையர்கள் திருமதி இரா.வான்மதி, எஸ்.ஞானசேகரன், எஸ். சிவராம்குமார், எம். சூரிய நாராயணன், பாரத ஸ்டேட் வங்கியின் மண்டல முதன்மை மேலாளர் பி.இரமேஷ் மண்டல துணை மேலாளர் எம். நவீன், மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர் திருமதி ஆண்டாள் ராம்குமார், சமயபுரம் திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் இளங்கோவன், ஸ்ரீரங்கம் தலைமை அர்ச்சகர் சுந்தர் பட்டர், இதரத் திருக்கோயில்களின் அறங்காவலர் குழுத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 73வது பிறந்த நாளை முன்னிட்டு கோவை தெற்கு மாவட்ட தி.மு.க., சூலூர் நகர தி.மு.க. மற்றும் JJ GUYS கால்பந்து கழகம் இணைந்து நடத்தும் 32 அணிகள் பங்கு பெறும் மாவட்ட அளவிலான கால்பந்து போட்டியினை மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் துவக்கி வைத்தார். இதில் சூலூர் பேரூர் கழக செயலாளர் கவுதமன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் சூலூர் பிரபு, சூலூர் பேரூர் இளைஞர் அணி துணை அமைப்பாளர் குரு, குறிச்சி மேற்கு பகுதி மாணவர் அணி துணை அமைப்பாளர் திலீப்குமார் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.